සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

60 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023 (2024)

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය I, II
வணிகக் கல்வியும் கணக்கீடும் I, II
Business and Accounting Studies I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## வணிகக் கல்வியும் கணக்கீடும் I

அறிவுறுத்தல்கள் :

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

● பின்வரும் சம்பவக் கற்கையை அடிப்படையாகக் கொண்டு 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

களுதாவளை வித்தியாலயத்தில் கல்வி கற்கும் சந்தோஷ் மற்றும் தனுஷ் ஆகியோர், விளையாட்டுப் பயிற்சியின்போது ஏற்பட்ட தமது தாகத்தைத் தணிப்பதற்கு தமது ஆசிரியருடன் ஜில் ஜில் குளிர்பான சாலைக்கு சென்று பழச்சாற்றை அருந்தினர். ஜில் ஜில் குளிர்பான சாலையானது அமலா என்பவரால் களுதாவளை வியாபார நிலையத்தின் வாடகைக் கட்டடத்தில் நடாத்தப்படுகின்றது. பழச்சாற்றைத் தயாரிப்பதற்கான பழங்களை சேதனப் பசளையை மட்டுமே பயன்படுத்தி பழங்களை உற்பத்தி செய்யும் ஹரிதர் பண்ணையில் இருந்து அமலா கொள்வனவு செய்கின்றார்.

1. மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் உள்ளடங்கியுள்ள தேவை, விருப்பம் ஆகியவற்றை முறையே எடுத்துக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
   (1) கல்வி, களுதாவளை வியபார நிலையம்
   (2) களுதாவளை வித்தியாலயம், கல்வி
   (3) விளையாட்டுப் பயிற்சி, சுகாதாரம்
   (4) உணவு, பழச்சாறு

2. ஜில் ஜில் குளிர்பான சாலையின் உற்பத்திக் காரணியான மூலதனத்திற்கான உதாரணமாக அமைவது
   (1) ஜில் ஜில் குளிர்பான சாலை தொழிற்படும் வாடகைக் கட்டடம் ஆகும்.
   (2) ஜில் ஜில் குளிர்பான சாலைக்கு அருகாமையில் அமைந்திருக்கும் விளையாட்டு மைதானம் ஆகும்.
   (3) ஜில் ஜில் குளிர்பான சாலைக்கு பழங்களை வழங்கும் ஹரிதர் பண்ணை ஆகும்.
   (4) பழச்சாற்றை தயாரிப்பதற்காக ஜில் ஜில் குளிர்பான சாலையால் பயன்படுத்தப்படும் புதிய பழங்கள் ஆகும்.

3. ஜில் ஜில் குளிர்பான சாலையானது எந்த வணிக நிறுவன வகைக்கு உரித்தானதாகும்?
   (1) தனியுடைமை
   (2) பங்குடைமை
   (3) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி
   (4) அரச திணைக்களம்

4. களுதாவளை வித்தியாலயத்தின் புறச்சூழல் காரணிக்கான உதாரணமாக அமைவது
   (1) சந்தோஷ்
   (2) விளையாட்டுப் பாட ஆசிரியர்
   (3) தனுஷ்
   (4) அமலா

5. ஜில் ஜில் குளிர்பான சாலையுடன் தொடர்புடைய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
   (1) ஜில் ஜில் குளிர்பான சாலையுடன் தொடர்புடையதாக அமலாவின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாகும்.
   (2) சேதனப் பழங்களை செய்கை செய்யும் ஹரிதர் பண்ணையானது ஜில் ஜில் குளிர்பான சாலைக்கு ஒரு பலமாகும்.
   (3) ஜில் ஜில் குளிர்பான சாலையானது பழங்களை செய்கை செய்யும் ஹரிதர் பண்ணையின் அக்கறையுடைய தரப்பினர் ஆகும்.
   (4) ஜில் ஜில் குளிர்பான சாலை விற்பனை செய்யும் பழச்சாறு சந்தைப்படுத்தற் கலவையின் மேம்படுத்தல் ஆகும்.

**6.** பின்வரும் அட்டவணையில் வணிகங்கள் சிலவற்றின் பெயர்களும் வணிக நிறுவன வகைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

| வணிகங்களின் பெயர்கள் | வணிக நிறுவன வகைகள் |
|---|---|
| 1 - இலங்கை துறைமுக அதிகாரசபை | A - கூட்டிணைக்கப்பட்ட கம்பனி |
| 2 - ஐக்கிய விளையாட்டுக் கழகம் | B - அரச கூட்டுத்தாபனம் |
| 3 - லக் பொது வரையறுத்த கம்பனி | C - பங்குடைமை |
| 4 - நந்தன் அண்ட் கந்தன் தளபாடக் கடை | D - சங்கம் (Association) |

மேலே தரப்பட்டுள்ள வணிகங்களின் பெயர்களின் ஒழுங்கிற்கமைவாக முறையே வணிக நிறுவன வகைகளை சரியாக எடுத்துக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) B, D, A, C (2) B, D, C, A (3) D, B, A, C (4) D, B, C, A

**7.** இலாப நோக்குடைய நிறுவனம் ஒன்று
(1) இலங்கை புகையிரத சேவைகள்
(2) ஸ்ரீலங்கா ரெலிக்கொம் PLC
(3) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
(4) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**8.** காசோலை ஒன்றின் வரைவுணியானவர் (drawee) எப்பொழுதும்
(1) நடைமுறைக் கணக்கை வைத்திருப்பவர் ஆவார்.
(2) உரிமம் பெற்ற வணிக வங்கி ஆகும்.
(3) சேமிப்புக் கணக்கை வைத்திருப்பவர் ஆவார்.
(4) இலங்கை மத்திய வங்கி ஆகும்.

**9.** நடைமுறைக் கணக்குடன் தொடர்புடைய இரண்டு கூற்றுகள் கீழே தரப்படுகின்றது.

**A** - உரிமம் பெற்ற வணிக வங்கிகளில் மட்டுமே நடைமுறைக் கணக்குகளை ஆரம்பிக்க முடியும்.

**B** - சேமிப்புக் கணக்குகளிலும் பார்க்க நடைமுறைக் கணக்குகளுக்கு உயர்வான வட்டி வீதம் வழங்கப்படுகின்றது.

மேலே தரப்பட்ட கூற்றுகள் தொடர்பில் சரியான விடையைத் தெரிவு செய்க.

(1) **A** மட்டும் உண்மையானதாகும். (2) **B** மட்டும் உண்மையானதாகும்.
(3) **A, B** ஆகிய இரண்டும் உண்மையானதாகும். (4) **A, B** ஆகிய இரண்டும் பொய்யானதாகும்.

**10.** இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமானது எரிபொருள் (fuel) விலைகளை ஒவ்வொரு மாதமும் திருத்தியமைக்கின்றது. இக்கூற்றில் உள்ளடங்கியுள்ள போக்குவரத்தின் அடிப்படைக் கூறு யாது?

(1) வழி (2) ஊடகம் (3) வலு (4) தரிப்பிடம்

**11.** அரலிய கம்பனியின் முகாமையாளரானவர் தொலைநகல் (fax) செய்தியூடாக வழங்குனருக்கு கொள்வனவுக் கட்டளையை அனுப்பினார். இங்கு
(1) தொடர்பாடலின் சகல அடிப்படைக் கூறுகளுடனும் தொடர்பாடல் செயன்முறையானது காணப்படுகின்றது.
(2) தொடர்பாடல் முறையானது தொலைநகல் செய்தியாகும்.
(3) செய்தியைப் பெறுபவர் அரலிய கம்பனியின் முகாமையாளர் ஆவார்.
(4) தொடர்பாடல் ஊடகமானது இலத்திரனியல் வாய்மொழி மூலமானதாகும்.

**12.** குறிப்பிடப்பட்டுள்ள காப்புறுதித் தத்துவங்களில் இருந்து ஆயுட்காப்புறுதியில் தாக்கம் செலுத்தும் விடையைத் தெரிவு செய்க.

(1) காப்புறுதி செய்தகுநலன், மிக்குயர் நம்பிக்கை (2) காப்புறுதி செய்தகுநலன், இழப்பீடு
(3) மிக்குயர் நம்பிக்கை, இழப்பீடு (4) காப்புறுதி செய்தகுநலன், பங்களிப்பு

- பின்வரும் சம்பவக் கற்கையை பயன்படுத்தி **13, 14** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

இராஜகுமாரி தனது வாராந்த நுகர்வுக்கான காய்கறிகளை வழமையாக நஸ்ரினா என்பவரிடம் வாங்குகின்றார். நஸ்ரினா தனது பண்ணையில் சேதன காய்கறிகளை செய்கை பண்ணுவதுடன் அவற்றை வீட்டுக்கு வீடு காவிச் சென்று வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்கின்றார்.

**13.** மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நஸ்ரினா மற்றும் இராஜகுமாரி ஆகியோர் முறையே
(1) சில்லறை விற்பனையாளர், நுகர்வோர் ஆவர். (2) நுகர்வோர், சில்லறை விற்பனையாளர் ஆவர்.
(3) மொத்த வியாபாரி, சில்லறை விற்பனையாளர் ஆவர். (4) மொத்த வியாபாரி, நுகர்வோர் ஆவர்.

**14.** வீட்டுக்கு வீடு காவிச் சென்று விற்பனை செய்தலானது சந்தைப்படுத்தல் கலவையின் எந்த மாறிக்கு உரித்தானதாகும்?
(1) உற்பத்திப்பொருள் (2) விலை (3) இடம் (4) மேம்படுத்தல்

**15.** பாடசாலை ஒன்றின் பாடவேளைகளை வேறுபடுத்துவதற்காக மணி அடித்தலானது, முகாமைத்துவச் செயன்முறையின் எந்தக் கருமத்துக்கு உரித்தானதாகும்?
(1) திட்டமிடல் (2) ஒழுங்கமைத்தல் (3) தலைமைவகித்தல் (4) கட்டுப்படுத்தல்

**16.** மயூரன் என்பவர் தனது இளைப்பாறலின்போது பெற்ற பணிக்கொடைத் (gratuity) தொகையை கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகளில் முதலீடு செய்தார். இதிலிருந்து மயூரன் பெற்றுக்கொள்ளக்கூடிய நிதி அனுகூலங்களாவன
(1) வட்டி வருமானம், பங்கிலாபங்கள் (2) வட்டி வருமானம், மூலதன ஆதாயங்கள்
(3) பங்கிலாபங்கள், மூலதன ஆதாயங்கள் (4) பங்கிலாபங்கள், கூலிகள்

**17.** இரட்டைப் பதிவுத் தத்துவத்தின்படி வரவுப் பக்கத்தில் அதிகரிப்பும் செலவுப் பக்கத்தில் குறைவும் பதியப்படும் கணக்கு
(1) கடன்பட்டோர் கணக்கு (2) கடன்கொடுத்தோர் கணக்கு
(3) பெற்ற தரகுக் கணக்கு (4) மூலதனக் கணக்கு

**18.** கணினிகளை வாங்கி விற்கும் வணிகம் ஒன்றில், எக்கணினிகள் நடைமுறையல்லாத சொத்தாகக் கருதப்படும் கணினிகள் ஆகும்?
(1) விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியத்தில் இருப்பவை
(2) விற்பனைக்காக விற்பனை நிலையத்தில் காணப்படுபவை
(3) அலுவலகத்தில் பயன்படுத்தப்படுபவை
(4) உடைமையாளரின் தனிப்பட்ட பாவனைக்காக பெறப்பட்டவை

- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **19** தொடக்கம் **21** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

2024 ஜனவரி மாதத்தில் யோகன் வணிகத்தில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

**A** - ரூ. 25 000 பெறுமதியான பொருட்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது.
**B** - ரூ. 75 000 காசுக்கு தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டது.
**C** - ரூ. 25 000 கிரயமான பொருட்கள் ரூ. 40 000 இற்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது.
**D** - கடன்கொடுத்தோர் ஒருவருக்கு ரூ. 15 000 செலுத்தப்பட்டது.

**19.** யோகன் வணிகத்தின் கொடுக்கல்வாங்கல்களில் சொத்துக்களில் தாக்கத்தை ஏற்படுத்துவது
(1) **A, B** மாத்திரம். (2) **B, C** மாத்திரம்.
(3) **A, B** மற்றும் **C** மாத்திரம். (4) **A, B, C** மற்றும் **D** ஆகிய எல்லாம்.

**20.** 31.01.2024 இல் இருந்தவாறு இவ்வணிகத்தின் உரிமையாண்மையில் ஏற்பட்ட அதிகரிப்பு
(1) ரூ. 15 000 ஆல் ஆகும். (2) ரூ. 25 000 ஆல் ஆகும்.
(3) ரூ. 40 000 ஆல் ஆகும். (4) ரூ. 65 000 ஆல் ஆகும்.

**21.** 31.01.2024 இல் இருந்தவாறு யோகன் வணிகத்தின் மொத்தப் பொறுப்பானது ரூ. 90 000 ஆகும். மேலே தரப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்கு முன்னர் 01.01.2024 இல் இருந்தவாறு இவ்வணிகத்தின் மொத்தப் பொறுப்புக்களின் தொகையானது
(1) ரூ. 55 000 (2) ரூ. 65 000 (3) ரூ. 80 000 (4) ரூ. 105 000

**22.** வணிகத்தின் சொத்துக்கள், பொறுப்புக்கள் ஆகிய இரண்டிலும் குறைவை ஏற்படுத்தும் கொடுக்கல்வாங்கல் எது?
(1) சொந்தப் பயன்பாட்டிற்காக உடைமையாளரால் ரூ. 5 000 எடுக்கப்படல்
(2) கடன்கொடுத்தோர் ஒருவருக்கு ரூ. 15 000 செலுத்தப்படல்
(3) மின்சாரப் பட்டியலுக்காக ரூ. 13 000 செலுத்தப்படல்
(4) ரூ. 45 000 பெறுமதியான பொருட்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்படல்

- பின்வரும் மூல ஆவணத்தைப் பயன்படுத்தி **23, 24** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

பட்டியல்
ராஜா வியாபாரிகள்
இல. 25, குருநாகல்

முகாமையாளர்,
விஜயா தொலைபேசி கம்பனி,
இல. 200, வாரியப்பொல.

இல : 1820
திகதி: 2024.02.25

| தொடர் இல | விவரணம் | அளவு | அலகு விலை (ரூபா) | தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | கையடக்கத் தொலைபேசிகள் | 20 | 15 000 | 300 000 |
| | கழி - 10% வியாபாரக் கழிவு | | | (30 000) |
| | | | | 270 000 |

25.03.2024 இற்கு முன்னர் கொடுப்பனவு செய்யப்பட்டால் 5% கழிவு

விக்ரமன்
விற்பனை முகாமையாளர்

**23.** மேலே தரப்பட்ட மூல ஆவணத்தின் தகவல்கள் ராஜா வியாபாரிகளின் மூலப் பதிவேட்டில் எங்கே பதிவு செய்யப்பட்டிருக்கும்?
(1) கொள்வனவு நாட்குறிப்பேட்டில் (2) விற்பனை நாட்குறிப்பேட்டில்
(3) பொது நாட்குறிப்பேட்டில் (4) காசேட்டில்

**24.** விஜயா தொலைபேசி கம்பனியின் புத்தகங்களில் மேலே தரப்பட்ட மூல ஆவணத்தில் கொடுக்கல்வாங்கலை பதிவதற்கான இரட்டைப் பதிவு எது?

(1) கொள்வனவுகள் கணக்கு வரவு ரூ. 270 000
ராஜா கணக்கு செலவு ரூ. 270 000

(2) விஜயா தொலைபேசி கம்பனி கணக்கு வரவு ரூ. 270 000
விற்பனைகள் கணக்கு செலவு ரூ. 270 000

(3) விஜயா தொலைபேசி கம்பனி கணக்கு வரவு ரூ. 300 000
விற்பனைகள் கணக்கு செலவு ரூ. 300 000

(4) கொள்வனவுகள் கணக்கு வரவு ரூ. 300 000
ராஜா கணக்கு செலவு ரூ. 300 000

**25.** தளபாட வியாபார வணிகமொன்றின் பொது நாட்குறிப்பேட்டில் பதியப்பட்ட கொடுக்கல்வாங்கல்
(1) ரூ. 185 000 பெறுமதியான தளபாடங்கள் காசுக்கு கொள்வனவு செய்தல்
(2) ரூ. 175 000 பெறுமதியான தளபாடங்கள் கடனுக்கு கொள்வனவு செய்தல்
(3) ரூ. 125 000 பெறுமதியான தளபாடங்கள் வணிகப் பயன்பாட்டுக்காக கடனுக்கு கொள்வனவு செய்தல்
(4) ரூ. 75 000 பெறுமதியான தளபாடங்கள் வணிகப் பயன்பாட்டுக்காக காசுக்கு கொள்வனவு செய்தல்

**26.** வணிகமொன்றின் சில்லறைக் காசாளர் சில்லறைக் காசேட்டு வசக்கட்டை மீள நிரப்புவதற்காக 01.04.2024 இல் ரூ. 7 500 ஐ பெற்றுக் கொண்டார். 30.04.2024 இல் சில்லறைக் காசேட்டின் செலவு நிரல்களின் மொத்தம் ரூ. 8 500 ஆகவும் அத்தினத்தில் சில்லறை காசேட்டின் மீதித்தொகை ரூ. 1 500 ஆகவும் காணப்பட்டது. 31.03.2024 இல் இருந்தவாறு சில்லறைக் காசேட்டு மீதி
(1) ரூ. 1 500 (2) ரூ. 2 500 (3) ரூ. 8 500 (4) ரூ. 10 000

**27.** கடன்பட்டோரான வேணுஷா என்பவரிடமிருந்து 15.04.2024 இல் பெற்றுக்கொண்ட ரூ. 20 000 காசோலையானது 20.04.2024 இல் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது. காசோலையை வங்கியில் வைப்புச் செய்ததுடன் தொடர்புடைய சரியான இரட்டைப் பதிவைத் தெரிவு செய்க.

(1) காசுக் கணக்கு வரவு ரூ. 20 000
வங்கிக் கணக்கு செலவு ரூ. 20 000

(2) வங்கிக் கணக்கு வரவு ரூ. 20 000
வேணுஷா கணக்கு செலவு ரூ. 20 000

(3) வங்கிக் கணக்கு வரவு ரூ. 20 000
காசுக் கணக்கு செலவு ரூ. 20 000

(4) காசுக் கணக்கு வரவு ரூ. 20 000
வேணுஷா கணக்கு செலவு ரூ. 20 000

**28.** வணிகமொன்றின் வங்கிக் கணக்கு மீதியைச் செம்மையாக்குவதற்காக பயன்படுத்தப்பட்ட உருப்படியை மட்டும் உள்ளடக்கியுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) கடன்பட்டோர் நேரடி வைப்பு, நிலையான கட்டளைக் கொடுப்பனவுகள்
(2) கடன்பட்டோர் நேரடி வைப்பு, வைப்பிலிடப்பட்ட போதும் வசூலிக்கப்படாத காசோலைகள்
(3) வைப்பிலிடப்பட்ட போதும் வசூலிக்கப்படாத காசோலைகள், வழங்கப்பட்ட போதும் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்
(4) வழங்கப்பட்ட போதும் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள், நிலையான கட்டளைக் கொடுப்பனவுகள்

**29.** வணிகமொன்றின் வங்கிக் கணக்கு மீதியிலும் பார்க்க வங்கிக்கூற்று மீதி குறைவாக காணப்படுவதற்கு காரணமான கொடுக்கல்வாங்கல் எது?

(1) வழங்கப்பட்ட போதும் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூ. 10 000
(2) வைப்பிலிடப்பட்ட போதும் வசூலிக்கப்படாத காசோலை ரூ. 12 000
(3) வங்கிக்கு நேரடியாகக் கிடைத்த பங்கிலாப வருமானம் ரூ. 8 000
(4) கடன்பட்டோர் நேரடி வைப்பு ரூ. 5 000

**30.** 2023 ஆம் வருடத்தில், இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் வருமானம் ரூ. 230 000 ஆகவும் மொத்த செலவுகள் ரூ. 180 000 ஆகவும் காணப்பட்டது. அதற்கமைய 2023 ஆம் வருடத்தில் இளைஞர் விளையாட்டுக் கழகம் சம்பாதித்தது

(1) மிகையாக ரூ. 230 000
(2) பற்றாக்குறையாக ரூ. 180 000
(3) மிகையாக ரூ. 50 000
(4) பற்றாக்குறையாக ரூ. 50 000

**31.** ஐன்ஸ்ரீன் சனசமூக நிலையத்தின் வருடாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ. 200 ஆகும். மொத்த அங்கத்தவர் எண்ணிக்கை 50 ஆக இருந்ததுடன் 10 அங்கத்தவர்கள் 2023 ஆம் வருடத்திற்கான அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தவில்லை. 2023 ஆம் வருடத்திற்காக நிலையத்தினால் தயாரிக்கப்பட்ட பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கில் உள்ளடங்கியுள்ள அங்கத்துவக் கட்டணத் தொகை

(1) ரூ. 8 000 (2) ரூ. 10 000 (3) ரூ. 96 000 (4) ரூ. 120 000

**32.** மொத்த உற்பத்திக் கிரயத்தின் கூறுகளை எடுத்துக் காட்டும் விடையை தெரிவு செய்க.

(1) நேர் மூலப்பொருள் கிரயம், நேர் ஊழியக் கிரயம், ஏனைய நேர் செலவுகள், மூலக் கிரயம்
(2) நேர் மூலப்பொருள் கிரயம், நேர் ஊழியக் கிரயம், ஏனைய நேர் செலவுகள், உற்பத்தி மேந்தலைக் கிரயம்
(3) மறைமுக மூலப்பொருள் கிரயம், மறைமுக ஊழியக் கிரயம், ஏனைய மறைமுக செலவுகள், உற்பத்தி மேந்தலைக் கிரயம்
(4) நேர் மூலப்பொருள் கிரயம், நேர் ஊழியக் கிரயம், ஏனைய நேர் செலவுகள், உற்பத்திக் கிரயம்

- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **33, 34** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

சிறுவர்களுக்கான புத்தகங்கள் 500 ஐ அச்சிடுவதுடன் தொடர்புடைய செலவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூ. |
|---|---|
| அச்சடிக்கும் தாள்களும் தீந்தையும் (Ink) ........................................ - | 150 000 |
| புத்தகமொன்றை அச்சிடுவதற்கான இறைக் கட்டணம் ...................... - | 100 |
| அச்சியந்திரத்தை இயக்குபவரின் கூலி ........................................ - | 35 000 |
| (இங்கு இரண்டு இயந்திர இயக்குநர்கள் இருக்கின்றனர்) | |
| பசை, நூல் மற்றும் ஏனைய மூலப்பொருள்கள் ................................ - | 5 000 |
| மேற்பார்வையாளர் சம்பளம் ................................................... - | 25 000 |
| அச்சிடற் பிரிவின் மாதாந்த மின்சார பட்டியல் ............................ - | 20 000 |

**33.** சிறுவர் புத்தகங்களை அச்சடிப்பதுடன் (உற்பத்தி செய்வதுடன்) தொடர்புடைய ஏனைய மறைமுக செலவுகளின் மொத்தப் பெறுமதி

(1) ரூ. 20 000 (2) ரூ. 25 000 (3) ரூ. 50 000 (4) ரூ. 100 000

**34.** சிறுவர் புத்தகம் ஒன்றுக்கான உற்பத்திக் கிரயம்

(1) ரூ. 470.20 (2) ரூ. 540.20 (3) ரூ. 570.00 (4) ரூ. 640.00

- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **35** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

01.01.2023 இல் சேவை வழங்கும் வணிகமொன்றை ஆரம்பித்த சமீரா என்பவர் ரூ. 500 000 ஐ முதலீடு செய்ததுடன் அதில் இருந்து ரூ. 320 000 இற்கு அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தார். 31.12.2023 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்புடைய சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | ரூ. |
|---|---|---|
| **வருமானப் பெறுவனவுகள் :** | | |
| | சேவை வருமானம் | - 230 000 |
| | தரகு வருமானம் | - 75 000 |
| **செலவுக் கொடுப்பனவுகள் :** | | |
| | ஊழியர் சம்பளங்கள் | - 120 000 |
| | விளம்பரப்படுத்தற் செலவுகள் | - 40 000 |
| | கடன் வட்டி | - 2 000 |
| | காகிதாதிகள் செலவு | - 10 000 |
| | மின்சார செலவுகள் | - 15 000 |
| **31.12.2023 இல் இருந்தவாறான வணிகத்தின் சொத்துக்கள் :** | | |
| | அலுவலக உபகரணங்கள் (கிரயத்தில்) | - 320 000 |
| | காசு மீதி | - 50 000 |
| **31.12.2023 இல் இருந்தவாறான வணிகத்தின் பொறுப்புக்கள் :** | | |
| | வங்கி மேலதிகப் பற்று | - 10 000 |
| | வங்கிக் கடன் 10% | - 50 000 |

**மேலதிக தகவல்கள் :**

1. 31.12.2023 இல் இருந்தவாறு சரக்கிருப்புக்கள் எதுவும் காணப்படவில்லை.
2. 31.12.2023 இல் இருந்தவாறு 2023 டிசம்பர் மாதத்திற்கான ஊழியர் சம்பளங்கள் ரூ. 20 000 செலுத்தப்படவில்லை.
3. 31.12.2023 இல் இருந்தவாறு 2023 ஆம் வருடத்துடன் தொடர்புடைய தரகு வருமானம் ரூ. 15 000 பெறப்பட வேண்டும்.
4. அலுவலக உபகரணங்கள் வருடாந்தம் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.

**35.** 31.12.2023 இல் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட ஊழியர் சம்பளங்கள்
(1) ரூ. 20 000 (2) ரூ. 100 000 (3) ரூ. 120 000 (4) ரூ. 140 000

**36.** 31.12.2023 இல் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட நிலைய நிர்வாகச் செலவுகளின் மொத்தம்
(1) ரூ. 145 000 (2) ரூ. 165 000 (3) ரூ. 177 000 (4) ரூ. 197 000

**37.** 31.12.2023 இல் இருந்தவாறான சமீரா வணிகத்தின் மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்
(1) ரூ. 3 000 (2) ரூ. 20 000 (3) ரூ. 33 000 (4) ரூ. 83 000

**38.** 31.12.2023 இல் இருந்தவாறான சமீரா வணிகத்தின் மொத்த சொத்துக்கள்
(1) ரூ. 338 000 (2) ரூ. 353 000 (3) ரூ. 370 000 (4) ரூ. 385 000

**39.** 31.12.2023 இல் முடிவடைந்த வருடத்திற்கான சமீரா வணிகத்தின் தேறிய இலாபம் யாது?
(1) ரூ. 63 000 (2) ரூ. 78 000 (3) ரூ. 95 000 (4) ரூ. 133 000

**40.** 31.12.2023 இல் இருந்தவாறான சமீரா வணிகத்தின் மொத்த உரிமையாண்மை
(1) ரூ. 563 000 (2) ரூ. 578 000 (3) ரூ. 595 000 (4) ரூ. 633 000

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව

රහස්‍යයි
அந்தரங்கமானது

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2023 (2024)
# க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)

විෂය අංකය / பாட இலக்கம்: **60** | විෂයය / பாடம்: **வணிகக் கல்வியும் கணக்கீடும்**

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 2 | 21. | 3 | 31. | 1 |
| 02. | 4 | 12. | 1 | 22. | 2 | 32. | 2 |
| 03. | 1 | 13. | 1 | 23. | 2 | 33. | 1 |
| 04. | 4 | 14. | 3 | 24. | 1 | 34. | 4 |
| 05. | 3 | 15. | 3 | 25. | 3 | 35. | 4 |
| 06. | 1 | 16. | 3 | 26. | 2 | 36. | 4 |
| 07. | 2 | 17. | 1 | 27. | 3 | 37. | 3 |
| 08. | 2 | 18. | 3 | 28. | 1 | 38. | 2 |
| 09. | 1 | 19. | 4 | 29. | 2 | 39. | 2 |
| 10. | 3 | 20. | 1 | 30. | 3 | 40. | 2 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: 25 / 40

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: 25 / 40

# வணிகக் கல்வியும் கணக்கீடும் - II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**60 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය I, II
வணிகக் கல்வியும் கணக்கீடும் I, II
Business and Accounting Studies I, II

## வணிகக் கல்வியும் கணக்கீடும் II

**அறிவுறுத்தல்கள் :**

* முதலாம் வினா உட்பட, பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும், பகுதி II இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* அறிவுறுத்தல்களுக்கமைய ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. மேலதிகமாக எழுதப்படும் விடைகள், பரீட்சார்த்தியினால் வெட்டிவிடப்படாத சந்தர்ப்பங்களில் பரீட்சகரினால் புள்ளிகள் வழங்கப்படாமலேயே வெட்டிவிடப்படும்.

**1.** பின்வரும் சம்பவக் கற்கையைப் பயன்படுத்தி (i) தொடக்கம் (x) வரையான வினாக்களுக்கு விடை தருக.

கிரான்குளம் கிராமத்தில் வசிக்கும் அமலன் என்பவர் பாரம்பரிய வைத்திய குடும்பத்தில் இருந்து உருவான ஒரு ஆயுள்வேத வைத்தியர் ஆவார். இவர் 01.01.2024 இல் "ஆயுள்" எனும் வணிகப் பெயரில் ரூ. 800 000 ஐ காசாக ஈடுபடுத்தியதன் மூலம் கண் சம்பந்தமான நோய்களுக்கான ஆயுள்வேத மருந்து உற்பத்திப்பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கான வணிகமொன்றை அவரது தந்தையால் வழங்கப்பட்ட ரூ. 500 000 பெறுமதியான கட்டடத்தில் ஆரம்பித்தார். அதே நாளில் ரூ. 400 000 இற்கு இயந்திரங்களும் உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டன. ஆயுள்வேத உற்பத்திப்பொருட்களைத் தயாரிப்பதற்குத் தேவையான சில மூலப்பொருட்கள் கிரான்குளம் கிராமத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டன. மருந்து உற்பத்திப்பொருட்களின் தரத்தைப் பாதுகாப்பதற்காக மூலப்பொருட்கள் சூரிய ஒளியில் உலர்த்தப்பட்டதன் பின்னர் மருந்து உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்டன.

பின்வருவன 31.01.2024 இல் முடிவடைந்த மாதத்திற்காக நிகழ்ந்த கொடுக்கல்வாங்கல்கள் ஆகும்.

| | ரூ. |
|---|---|
| மூலப்பொருட்கள் கொள்வனவு | 350 000 |
| தொலைபேசிச் செலவுகள் | 5 000 |
| கூலிகள் - உற்பத்தி ஊழியர்கள் | 45 000 |
| - விற்பனை ஊழியர்கள் | 60 000 |
| ஏனைய உற்பத்திச் செலவுகள் | 30 000 |
| விளம்பரப்படுத்தற் செலவுகள் | 15 000 |
| விநியோக வாகனக் கட்டணங்கள் | 150 000 |
| கடன் விற்பனைகள் | 900 000 |

**மேலதிக தகவல்கள் :**

* 31.01.2024 இல் இருந்தவாறு மூலப்பொருட்கள் மற்றும் முடிவுப்பொருட்கள் எதுவும் இருப்புக்களாகக் காணப்படவில்லை.
* இயந்திரங்களும் உபகரணங்களும் வருடாந்தம் 6% நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.
* 31.01.2024 இல் இருந்தவாறு மாதாந்த மின்சாரப் பட்டியல் ரூ. 10 000 செலுத்தப்படவில்லை.

வணிகமானது உள்ளூர் வாடிக்கையாளர்களிடம் இருந்து தொலைபேசி, தொலைநகல் செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் கட்டளைகளைப் பெற்று அவற்றை விநியோகிக்கின்றது. வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் நிகழ்நிலைக் கட்டளைகளுக்காக வலைத்தளமொன்று வடிவமைக்கப்பட்டதுடன் நேர் நிகழ்நிலை கொடுப்பனவு வழிமுறை மூலம் அதனைப் பெற்றுக்கொள்வதற்கு வணிகம் தீர்மானித்தது.

(i) (அ) "ஆயுள்" வணிகத்தின் மூலம் பூர்த்தி செய்யப்படும் அடிப்படை மனிதத் தேவை எது?
(ஆ) நோக்கத்தின்படி ஆயுள் வணிகமானது எந்த வணிக நிறுவன வகைக்கு உரித்தானதாகும்?

(ii) (அ) ஆயுள் வணிகத்தின் பலம், வாய்ப்பு ஆகியவற்றுக்கு ஒவ்வொரு உதாரணம் வீதம் எழுதுக.
(ஆ) மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் உள்ளடங்கியுள்ள இலத்திரனியல் எழுத்து தொடர்பாடல் ஊடகத்திற்கான இரண்டு தொடர்பாடல் முறைகளை எழுதுக.

(iii) "ஆயுள்" வணிகத்துக்கு உரித்தான பின்வரும் ஒவ்வொரு உருப்படிக்குமான உற்பத்திக் காரணியைப் பெயரிடுக.
(அ) உற்பத்தி ஊழியர்கள்
(ஆ) வணிகத்திற்கான கட்டடம்
(இ) மூலப்பொருட்களை உலர்த்துவதற்காக பயன்படுத்தப்பட்ட சூரிய ஒளி
(ஈ) வணிகத்தை ஒழுங்கமைத்தலுக்கான அமலனின் ஆற்றல்

(iv) (அ) மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் உள்ளடங்கியுள்ள முகாமைத்துவக் கருமங்களான திட்டமிடல் மற்றும் ஒழுங்கமைத்தல் ஆகியவற்றுக்கு ஒவ்வொரு உதாரணம் வீதம் எழுதுக.
(ஆ) நிகழ்நிலை முறை மூலம் கட்டளைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்தான சந்தைப்படுத்தற் கலவை மாறி யாது?

(v) 01.01.2024 இல் இருந்தவாறான "ஆயுள்" வணிகத்தின் அடிப்படைக் கணக்கீட்டுச் சமன்பாட்டை தொகைகளுடன் எழுதுக.

(vi) விற்பனைகள் ரூ. 900 000 ஐ பதிவதற்கான
(அ) மூல ஆவணம் யாது?
(ஆ) மூல ஏடு யாது?

(vii) (அ) 31.01.2024 இல் முடிவடைந்த மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட இலாப நட்டக் கணக்கில் உள்ளடங்கியுள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வுத் தொகை யாது?
(ஆ) மேலே (vii) (அ) இன் பெறுமானத்தேய்வுத் தொகையைப் பதிவிடுவதற்கான இரட்டைப் பதிவை எழுதுக.

(viii) (அ) "ஆயுள்" வணிகத்தின் உற்பத்திப்பொருட்களின் மூலக் கிரயத்தில் உள்ளடங்கியுள்ள இரண்டு செலவுகளை தொகைகளுடன் எழுதுக.
(ஆ) ஆயுள் வணிகத்தின் விற்பனை விநியோகச் செலவுகள் இரண்டை தொகைகளுடன் எழுதுக.

(ix) 31.01.2024 இல் முடிவடைந்த மாதத்திற்கான "ஆயுள்" வணிகத்தின் இலாபம் அல்லது நட்டத்தைக் கணிப்பிடுக.

(x) (அ) 31.01.2024 இல் இருந்தவாறான "ஆயுள்" வணிகத்தின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் மொத்தத் தொகை எவ்வளவு?
(ஆ) 31.01.2024 இல் இருந்தவாறான "ஆயுள்" வணிகத்தின் உரிமையாண்மை எவ்வளவு?

(02 × 10 = 20 புள்ளிகள்)

1. i. (அ) சுகாதாரம் (1 புள்ளி)

(ஆ)

- இலாப நோக்குடைய வணிகம்
- இலாப நோக்குடைய தனியுடைமை வணிகம்

(1 புள்ளி)

ii. (அ) பலம் :-

- பாரம்பரிய வைத்திய குடும்பத்தில் தோன்றிய வைத்தியர்
- அமலன் ஆயுள்வேத வைத்தியர்
- போதியளவான நிதி வசதி
- தந்தையாருக்குச் சொந்தமான கட்டடம்.

(1/2 X 1 = ½ புள்ளி)

வாய்ப்பு :-

- கிரான்குளம் கிராமத்திலேயே மூலப்பொருட்கள் பெற முடிதல்.
- உள்நாட்டு வாடிக்கையாளர்
- வெளிநாட்டு வாடிக்கையாளர்
- மூலப்பொருட்களை உலர்த்துவதற்கு சூரிய ஒளியைப் பயன்படுத்துதல்.
- தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதி காணப்படல்.

**(1/2 X 1 = ½ புள்ளி)**

(ஆ )

- தொலை நகல் ( Fax )
- மின் அஞ்சல் (e.Mail)
- வலைத்தளம் ( Web page )

**(1/2 X 2 = 1 புள்ளி)**

iii. (அ ) (அ) உழைப்பு

(ஆ) மூலதனம்

(இ) நிலம்

(ஈ) முயற்சியாண்மை

**(1/2 X 4 = 2 புள்ளி)**

iv. (அ ) திட்டமிடல் :-

- வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் நிகழ்நிலை கட்டளைகளுக்காக வலைத்தளமொன்று வடிவமைக்கப்பட்டதுடன் நேர் நிகழ்நிலை கொடுப்பனவு வழிமுறை மூலம் அதனைப் பெற்றுக்கொள்வதற்கு வணிகம் தீர்மானித்தல்.

**(1/2 X 1 = 1/2 புள்ளி)**

ஒழுங்கமைத்தல் :-

- இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்தல்.
- மூலப்பொருட்கள் கொள்வனவு செய்தல்.
- ஊழியர்களை வேலைக்கு அமர்த்துதல்.
- வியாபார நிறுவனத்தில் மூலதனத்தை ஈடுபடுத்துதல்.
- வியாபார நிறுவனத்திற்கு கட்டிடம் கிடைத்தமை.

**(1/2 X 1 = ½ புள்ளி)**

(ஆ) இடம் / விநியோகம்.

**( 1 X 1 = 1 புள்ளி)**

v. சொத்து ரூபா = உரிமையாண்மை ரூபா + பொறுப்பு ரூபா

1300000 = 1300000 + -

(2 புள்ளி)

அல்லது

சொத்து ரூபா = உரிமையாண்மை ரூபா

1300000 = 1300000

( 2 புள்ளி)

அல்லது

| சொத்து | = | உரிமையாண்மை | | + | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| + 500000 கட்டிடம் | = | +500000 | ½ | + | - |
| +800000 காசு | = | +800000 | ½ | + | - |
| - 400000 காசு | = | - | | + | - |
| +400000 இயந்திர உகரணம். ½ | | | | | |
| 1300000 | | 1300000 | | | |

( 2 புள்ளி)

vi. (அ ) விற்பனைப் பட்டியல் (1 புள்ளி)

(ஆ ) விற்பனை நாட்குறிப்பு (1 புள்ளி)

vii. (அ ) ரூபா 2000 (1 புள்ளி)

அல்லது

400000 X 6/100 X 1/12

(கணீப்பீடு இருந்தால் ½ புள்ளி வழங்கவும் )

(ஆ ) இயந்திர உபகரண பெறுமானத்தேய்வுக் க/கு வரவு 2000

இயந்திர உபகரண பெறுமானத் தேய்வு ஏற்பாட்டு க/கு / திரண்ட பெறுமானத் தேய்வு ஏற்பாட்டு க/கு செலவு 2000

(1 புள்ளி)

viii. (அ) மூலப்பொருள் கொள்வனவு 350000 ரூபா
உற்பத்தி ஊழியர் கூலி 45000 ரூபா

(1/2 X 2 = 1 புள்ளி)

(ஆ)

விற்பனை ஊழியர் கூலி 60000 ரூபா

விளம்பரம் 15000 ரூபா

விநியோக வாகனங்கள் கட்டணங்கள் 150000 ரூபா

(1/2 X 2 = 1 புள்ளி )

ix. 31.01.2024 இல் முடிவடைந்த மாதத்திற்கான இலாபம் 233000 ரூபா

(2 புள்ளி)

அல்லது

ஆயுள் வணிகத்தின் 2024.01.2024 இல் முடிவடைந்த மாதத்திற்கான வருமானக்கூற்று

| | | |
|---|---|---|
| **வருமானங்கள்** | ரூபா | ரூபா |
| கடன் விற்பனை | | 900000 (½) |
| **கழி : செலவுகள்** | | |
| மூலப்பொருள் கொள்வனவு | *350000 | |
| தொலைபேசி | * 5000 | |
| உற்பத்தி ஊழியர்கள் கூலி | * 45000 | |
| விற்பனை ஊழியர் கூலி | * 60000 | |
| ஏனைய உற்பத்திச் செலவுகள் | * 30000 | |
| விளம்பரம் | * 15000 | |
| விநியோக வாகனக் கட்டணம் | * 150000 | |
| இயந்திர உபகரணப் பெறுமானத் தேய்வு | (½) 2000 | |
| மின்சாரம் | 10000 | (½) (667000) |
| **இலாபம்** | | **233000** |

( * இவை 4 அல்லது அதற்கு மேல் உருப்படிகள் இருந்தால் ½ புள்ளி வழங்கவும். ) (2 புள்ளி)

x. (அ) 31.01.2024 இல் இருந்தவாறான நடைமுறையல்லாச் சொத்துக்களின் மொத்தப் பெறுமதி 898000 ரூபா

(1 புள்ளி )

இயந்திர உபகரணம் 398000 ரூபா (½)

அல்லது

கட்டிடம் 500000 ரூபா (½)

(1 புள்ளி)

(ஆ) 31.01.2024 இல் இருந்தவாறான உரிமையாண்மை 1533000 ரூபா

(1 புள்ளி)

அல்லது

| | |
|---|---|
| மூலதனம் | 1300000 |
| + இலாபம் (½) | 233000 |
| | 1533000 |

(1 புள்ளி )

| வினா இல | (i) | | (ii) | | (iii) | | | | (iv) | | (v) | (vi) | | (vii) | | (viii) | | (xi) | (x) | | 20 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | அ | ஆ | அ | ஆ | அ | ஆ | இ | ஈ | அ | ஆ | | அ | ஆ | அ | ஆ | அ | ஆ | | அ | ஆ | 20 |
| | 01 | 01 | 01 | 01 | 1/2 | 1/2 | 1/2 | 1/2 | 01 | 01 | 02 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 02 | 01 | 01 | 20 |

பகுதி I - வணிகக் கல்வி

(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

2. (i) தனியுடைமை வணிகத்தின் குணாம்சங்கள் இரண்டு எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதைக் குறிப்பிடுக.

(அ) உடைமையின் அடிப்படையில், வணிக நிறுவனங்கள் தனியார், பொதுத் துறைகள் என வகைப்படுத்தப்படுகின்றது.

(ஆ) [illegible] வணிக வாய்ப்புக்களும் [illegible] இணைக்கப்படுகின்றன.

(இ) வணிகக் கட்டடம் அமைந்திருக்கும் இடம் எப்பொழுதும் உற்பத்திக் காரணியான நிலத்திற்கு உரித்தானதாகும்.

(ஈ) வணிகமொன்றின் உடைமையாளரானவர் வணிக நிறுவனத்தின் வகையைப் பொருட்படுத்தாமல் வரையறையற்ற பொறுப்புக்கு உரித்தானவராவார். (02 புள்ளிகள்)

(iii) இரண்டு வகையான வணிகங்கள் கீழே தரப்படுகின்றன.

A - கொழும்பு தேசிய வைத்தியசாலை

B - கந்தூர் சாரதி பாடசாலை

(அ) A, B ஆகியவற்றால் பூர்த்தி செய்யப்படும் மனிதத் தேவைகள் எவை?

(ஆ) உற்பத்திப்பொருளின் தன்மையின்படி மேலே தரப்பட்ட A, B வணிகங்களை வகைப்படுத்துக. (02 புள்ளிகள்)

(iv) பிரபல்யமான சிறப்புச் சந்தை வலையமைப்பொன்றின் உரிமையாளரான அரவிந்தன் என்பவர் வாடிக்கையாளர் தேவைகளை இனங்காண்பதன் மூலம் கழிவுகளை வழங்கத் தீர்மானிப்பதற்கு செயற்கை நுண்ணறிவு (AI), ரோபோ தொழினுட்பம் ஆகியவற்றைப் பயன்படுத்தத் தீர்மானித்தார்.

(அ) மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் குறிப்பிடப்பட்ட சிறப்புச் சந்தையானது எவ்வகையான வணிக நிறுவனத்துக்கு உரித்தானதாகும்?

(ஆ) மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் உள்ளடங்கியுள்ள தொழினுட்பச் சூழல் காரணியை எழுதுக.

(02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

2. (i)

- மூலதனமானது உரிமையாளராகிய தனிநபரால் ஈடுபடுத்தப்படல்.
- இலாபம் அல்லது நட்டத்தை உரிமையாளரே அனுபவித்தல்.
- உரிமையாளரின் வரையறுக்கப்படாத நட்டப்பொறுப்பு
- சட்ட ஆளுமை காணப்படாமை
- தொடர்ந்து இயங்கும் தன்மை காணப்படாமை
- பதிவு செய்தல் கட்டாயமற்றது.
- சுயாதீனமாக தீர்மானம் எடுக்க முடிதல்
- நிர்வாகத்தை உரிமையாளரே மேற்கொள்ளல்.
- தனது விருப்பத்திற்கு ஏற்ப வணிகத்தை முடிவுக்குக் கொண்டு வரல்.
- சட்டக் கட்டுப்பாடுகள் குறைவு. ( 1 X 2 = 2 புள்ளி )

(ii) (அ) உண்மை
(ஆ) பொய்
(இ) பொய்
(ஈ) பொய்

( 1/2 X 4 = 2 புள்ளி )

(iii) (அ) A – சுகாதாரம்.
B – கல்வி

( 1/2 X 2 = 1 புள்ளி )

(ஆ) A – சேவை உற்பத்தி வணிகம்.
B - சேவை் உற்பத்தி வணிகம்.

( 1/2 X 2 = 1 புள்ளி )

(iv) (அ) தனியுடைமை வணிகம் / இலாப நோக்குடைய வணிகம் / தனியாள் வணிகம் / பாரியளவான வியாபார நிறுவனம்.

( 1 X 1 = 1 புள்ளி )

(ஆ)
- செயற்கை நுண்ணறிவு (AI) தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தல்.
- றோபோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல்.

( 1 X 1 = 1 புள்ளி )

| வினா இல | i | ii | | | | iii | | iv | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 02 | | அ | ஆ | இ | ஈ | அ | ஆ | அ | ஆ | 08 |
| | 02 | 1/2 | 1/2 | 1/2 | 1/2 | 01 | 01 | 01 | 01 | 08 |

3. (i) ஆதனக் காப்புறுதிக்கும் ஆயுட் காப்புறுதிக்கும் இடையிலான வித்தியாசங்கள் இரண்டு எழுதுக.
(02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் உண்மையா, பொய்யா என்பதைக் குறிப்பிடுக.

(அ) வணிக வங்கி ஒன்றில் வங்கி மேலதிகப்பற்று வசதியைப் பெற்றுக்கொள்வதற்கு சேமிப்புக் கணக்கை வைத்திருப்பது தேவையானதாகும்.

(ஆ) வணிகமொன்றில் மின்னஞ்சலானது உள்வாரித் தொடர்பாடல் முறையாகவும் அத்துடன் வெளிவாரித் தொடர்பாடல் முறையாகவும் காணப்படுகிறது.

(இ) இழப்பீட்டுத் தத்துவமானது ஆயுட் காப்புறுதிக்குப் பொருத்தமானதல்ல.

(ஈ) யாழ்ப்பாணம் புகையிரத நிலையமானது போக்குவரத்தின் அடிப்படைக் கூறான தரிப்பிடத்திற்கு ஒரு உதாரணமாகும்.
(02 புள்ளிகள்)

(iii) ஆடைத் தொழிற்சாலையைக் கொண்டு நடாத்தும் அமராவதி, மூலப்பொருட்களின் கொள்வனவுக்காக சாரதா என்பவருக்கு ரு. 100 000 பெறுமதியான காசோலையை வழங்கினார். எனினும் அமராவதி, மக்கள் வங்கியிலும், சாரதா, இலங்கை வங்கியிலும் நடைமுறைக் கணக்கை பேணுகின்றனர்.

(அ) மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் உள்ளடங்கியுள்ள காசோலையின் வரைபவர் மற்றும் வரையுனி ஆகியோரைப் பெயரிடுக.

(ஆ) அமராவதியிடம் இருந்து பெற்றுக் கொண்ட காசோலை தொடர்பில் சாரதா மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை இரண்டு எழுதுக.
(02 புள்ளிகள்)

(iv) பயணப் பைகளை உற்பத்தி செய்யும் வணிகமொன்றின் முகாமையாளரான தீபாவுக்கு 50 பயணப் பைகள் வேண்டுமென வாடிக்கையாளர் ஒருவர் தொலைபேசி மூலம் கேட்டுக் கொண்டார். தீபா கட்டளையைப் பெற்றுக்கொண்டு இரண்டு நாட்களில் விநியோகம் செய்வதாக உறுதியளித்திருந்தார்.

மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் உள்ளடங்கியுள்ள தொடர்பாடல் செயன்முறையின் தொடர்பாடலின் அடிப்படைக் கூறுகள் ஒவ்வொன்றுக்கும் உதாரணங்கள் எழுதுக.
(02 புள்ளிகள்)
(மொத்தம் 08 புள்ளிகள்)

3. (i)

| ஆதனக் காப்புறுதி | ஆயுள் காப்புறுதி |
|---|---|
| • குறித்த சொத்தின் நிதிரீதியான பெறுமானத்தின் அடிப்படையில் காப்புறுதி ஒப்பந்தத்தின் பெறுமானத்தொகை தீர்மானிக்கப்படும். | • காப்புறதி ஒப்பந்தத் தொகையானது வயது , கட்டணம் , உயிருக்கான இடரின் தன்மை , கொடுப்பனவு செய்யக் கூடிய இயலுமை என்பவைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். |
| • இழப்பீட்டுத் தத்துவம் பிரயோகிக்கப்படும். | • இழப்பீட்டுத் தத்துவம் பொருத்தமற்றதாகும். |
| • ஏனைய அனுகூலங்களுக்கு உரித்து இல்லை | • காப்புறுதி செய்யப்பட்ட பெறுமானத் தொகைக்கு மேலதிகமாக கொடுப்பனவுகளுடன் வட்டி , உபகாரப் பணமும் சேர்த்து வழங்கப்படும். |
| • குறுங்கால ஒப்பந்தம் | • நீண்டகால ஒப்பந்தம். |
| • இடர் நிச்சயமற்றது | • இடர் நிச்சயமானது |
| • கைமாற்றக்கூடியது | • கைமாற்ற முடியாது |

( 1 X 2 = 2 புள்ளி )

(ii) (அ) பொய்

(ஆ) உண்மை

(இ) உண்மை

(ஈ) உண்மை

( 1/2 X 4 = 2 புள்ளி )

(iii)

(அ)

- வரைபவர் : அமராவதி
- வரையுணி :- மக்கள் வங்கி

( 1/2 X 2 = 1 புள்ளி )

(ஆ)

- சாரதா தனது நடைமுறைக் கணக்கில் வைப்பிலிடுவதன் மூலமாக பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.
- காசோலையை புறக்குறிப்பிட்டு கைமாற்றம் செய்யலாம்.
- மக்கள் வங்கிகக் கரும பீடத்தில் நேரடியாகப் பணத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

( 1/2 X 2 = 1 புள்ளி )

(iv)

| தொடர்பாடல் செயன்முறை | தொடர்பாடலின் அடிப்படைக் கூறுகள் |
|---|---|
| அனுப்புபவர் | வாடிக்கையாளர் |
| செய்தி | 50 பயணப்பை வேண்டுமென கட்டளையிடல் |
| ஊடகம் | இலத்திரனியல் வாய்மொழி / வாய்மொழி / இலத்திரனியல் |
| பெறுபவர் | தீபா / முகாமையாளர் |
| துலங்கல் | கட்டளையை ஏற்றுக்கொள்ளல் |
| பின்னூட்டல் | இரண்டு நாட்களில் விநியோகிப்பதாக உறுதிப்படுத்தல். |

( 1/2 X 4 = 2 புள்ளி )

| வினா இல | i | ii | | | | iii | | iv | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 03 | | அ | ஆ | இ | ஈ | அ | ஆ | | 08 |
| | 02 | 1/2 | 1/2 | 1/2 | 1/2 | 01 | 01 | 02 | 08 |

4. (i) 'இலக்குச் சந்தை' என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் உண்மையா, பொய்யா என்பதனைக் குறிப்பிடுக.

(அ) உயர்வான திரும்பலை எதிர்பார்க்கும் முதலீடுகளில் உயர்வான இடரும் உள்ளடங்கியுள்ளது.

(ஆ) வணிகமொன்றினால் வழங்கப்படும் கழிவுகள், சந்தைப்படுத்தல் கலவையின் விலை என்ற மாறிக்கு உரித்தானதாகும்.

(இ) முகாமைத்துவச் செயன்முறையின் முதலாவது கருமம் ஒழுங்கமைத்தல் ஆகும்.

(ஈ) அரசாங்கத்தின் நீண்டகால மூலதனத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்காக திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படுகின்றன.

(02 புள்ளிகள்)

(iii) சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஒருவரால் சுடுநீர் போத்தல்களை அறிமுகப்படுத்துவதற்கான பிரேரணை ஒன்றுடன் தொடர்புடைய கூற்றுகள் கீழே தரப்படுகின்றது.

A - போத்தலின் உயரம் 15 செ.மீற்றர் ஆகவும் அதன் நிறம் பச்சையாகவும் இருக்கும்.

B - பாடசாலைகளுக்கு அண்மையாக ஆரம்ப அறிமுகப்படுத்தல்கள் நடைபெறும்.

C - விலையானது கிரயத்தின் மீது 10% இலாப எல்லையை உள்ளடக்கியதாகும்.

D - தொலைக்காட்சி ஊடாக விளம்பரம் செய்யப்படல் வேண்டும்.

மேலே தரப்பட்ட A, B, C மற்றும் D ஆகிய ஒவ்வொரு கூற்றுகள் தொடர்பான சந்தைப்படுத்தல் கலவையின் மாறிகளை எழுதுக.

(02 புள்ளிகள்)

(iv) ரூபன் என்பவர் தனது சேமிப்புக்களை பின்வரும் முதலீடுகளில் முதலீடு செய்ய உத்தேசிக்கின்றார்.

A - கொழும்பு பங்குச் சந்தையின் பட்டியல்படுத்திய கம்பனிகளில்

B - அரச வங்கி ஒன்றின் நிலையான வைப்பில்

C - அரச வங்கி ஒன்றின் சேமிப்பு வைப்பில்

D - தங்க நகைகளை வாங்குவதில்

(அ) ரூபன் மூலதன ஆதாயங்களை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பாராயின் எந்த முதலீட்டை நீர் சிபாரிசு செய்வீர்?

(ஆ) ரூபன் நிலையான மாதாந்த வட்டியைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பாராயின் எந்த முதலீட்டை நீர் சிபாரிசு செய்வீர்?

(02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

4. (i)

- வணிகத்திற்கு மிகவும் கவர்ச்சிகரமாகவும் , இலாபத்தன்மையுடன் திருப்திப்படுத்தக்கூடிய நுகர்வோர்களை உள்ளடக்கிய சந்தைப்பங்கு இலக்குச் சந்தை என அழைக்கப்படும்.

( 2 புள்ளிகள் )

ii. (அ.) உண்மை

(ஆ.) உண்மை

(இ.) பொய்

(ஈ.) பொய் ( ½ X 4 = 2 புள்ளி )

(iii) A. உறபத்திப்பொருள்

B. இடம் / மேம்படுத்தல்.

C. விலை

D. மேம்படுத்தல்.

( ½ X 4 = 2 புள்ளி )

(iv) (அ) A - கொழும்பு பங்குச் சந்தையின் பட்டியற்படுத்திய கம்பனிகளில்.

D - தங்க நகைகளை வாங்குவதில்.

( ½ X 2 = 1 புள்ளி )

(ஆ) B. அரச வங்கி ஒன்றின் நிலையான வைப்பில்.

( 1 X 1 = 1 புள்ளி )

| வினா இல 04 | i | ii | | | | iii | Iv | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அ | ஆ | இ | ஈ | | அ | ஆ | 08 |
| | 02 | 1/2 | 1/2 | 1/2 | 1/2 | 02 | 01 | 01 | 08 |

5. (i) கணக்கீடு என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கணக்குகள் ஒவ்வொன்றுக்கும் உரித்தான கணக்கின் வகையைக் குறிப்பிடுக.

(அ) கடன்பட்டோர் கணக்கு

(ஆ) பற்றுகள் கணக்கு

(இ) விற்பனைகள் கணக்கு

(ஈ) வங்கிக் கடன் கணக்கு (02 புள்ளிகள்)

(iii) (அ) சாஜஹான் என்பவர் 01.01.2024 இல் ரூ. 100 000 ஐ முதலீடு செய்ததன் மூலம் வணிகம் ஒன்றை ஆரம்பித்தார். இக்கொடுக்கல்வாங்கலின் பின்னரான சாஜஹான் வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டை எழுதுக.

(ஆ) [illegible] (iii) (அ) இல் குறிப்பிடப்பட்ட சாஜஹான் வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாடானது ஒரு கொடுக்கல்வாங்கலின் பின்னர் கீழே தரப்பட்டவாறு மாற்றமடைந்தது.

சொத்துக்கள் = உரிமையாண்மை + பொறுப்புக்கள்

ரூ. 200 000 ரூ. 100 000 ரூ. 100 000

இக்கொடுக்கல்வாங்கலின் மூலம் சொத்துக்களில் காசு ரூ. 100 000 ஆல் அதிகரித்தது. நிகழ்ந்த கொடுக்கல்வாங்கலை எழுதுக.

(இ) புனிதன் வணிகத்தில் நிகழ்ந்த சில கொடுக்கல்வாங்கல்கள் கீழே தரப்படுகின்றது.

1. கடனுக்கு கொள்வனவு செய்த சரக்குகள் ரூ. 10 000 ஆகும்.
2. கடன்பட்டோரிடம் பெற்றது ரூ. 20 000 ஆகும்.
3. ரூ. 35 000 கிரயமான பொருட்கள் ரூ. 50 000 இற்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது.

மேலே தரப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் புனிதன் வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டில் எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பதைக் குறிப்பிடுக. (விடையளிப்பதற்கு கீழே தரப்பட்ட மாதிரியை பயன்படுத்துக. முதலாவது கொடுக்கல்வாங்கலின் தாக்கம் தரப்படுகிறது.)

| கொடுக்கல் வாங்கல் இல. | சொத்துகள் | உரிமையாண்மை | பொறுப்புகள் |
|---|---|---|---|
| 1 | அதிகரிக்கும் | – | அதிகரிக்கும் |
| 2 | | | |
| 3 | | | |

(04 புள்ளிகள்)

(iv) 01.03.2024 இல் இருந்தவாறு சுபயான் வணிகத்தின் காசேட்டு மீதி ரூ. 15 800 ஆகும். 2024 மார்ச் மாதத்தின் காசுக் கொடுக்கல்வாங்கல்களுக்கு பொருத்தமான தகவல்கள் கீழே தரப்படுகின்றது.

| திகதி | பற்றுச்சீட்டு இல. | கைச்சாத்து இல. | விவரணம் |
|---|---|---|---|
| 05.03.2024 | 15 | – | காசுக்கு விற்ற பொருட்கள் ரூ. 35 000 ஆகும். |
| 10.03.2024 | – | 24 | தளபாடங்கள் கொள்வனவு ரூ. 60 000 ஆகும். |
| 17.03.2024 | 16 | – | கடன்பட்டோரிடமிருந்து பெற்றது ரூ. 45 000 ஆகும். |
| 29.03.2024 | – | 25 | மின்சாரப் பட்டியல் செலுத்தியது ரூ. 15 000 ஆகும். |

வேண்டப்படுவது:

(அ) சுபயான் வணிகத்தின் காசேட்டை தயாரித்து 31.03.2024 இல் இருந்தவாறான காசு மீதியைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

5. (i).

- வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் தீர்மானங்களை மேற்கொள்வதற்குப் பயனுள்ள தகவல்களை வழங்கும் செயன்முறையே கணக்கீடு ஆகும்.

( 2 புள்ளிகள் )

(ii) (அ) சொத்துக் கணக்கு

(ஆ) உரிமைக் கணக்கு

(இ) வருமானக் கணக்கு

(ஈ) பொறுப்புக் கணக்கு

( 1/2 X 4 = 2 புள்ளி )

(iii) (அ) சொத்து = உரிமை ( 1 புள்ளி )

ரூப 100000 = ரூபா 100000

(ஆ) வணிகத்திற்காகப் பெறப்பட்ட கடன் 100000 ரூபா ஆகும். ( 1 புள்ளி )

(இ)

| கொடுக்கல்வாங்கல் இல | சொத்துக்கள் | உரிமையாண்மை | பொறுப்புக்கள் |
|---|---|---|---|
| 2 | அதிகரிக்கும் குறையும் | - | 1 - |
| 3 | அதிகரிக்கும் குறையும் | அதிகரிக்கும் | 1 - |

( 2 X 1 = 2 புள்ளி )

( 4 புள்ளி )

(iv) காசுக் கணக்கு ½

| திகதி | ப.சீ. இ | விபரம் | பே. ப | பெறுமதி | திகதி | கை. இல | விபரம் | பே. ப | பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01.03.2024 | | மீ.கீ.கொ.வ | | 15800 ½ | 10.03.2024 | 24 | தளபாடம் | | 60000 |
| 05.03.2024 | 15 | விற்பனை | | 35000 ½ | 29.03.2024 | 25 | மின்சாரம் | | 15000 |
| 17.03.2024 | 16 | கடன்பட்டோர் | | 45000 ½ | 31.03.2024 | | மீ.கீ.கொ.செ | | 20800 |
| | | | | 95800 | | | | | 95800 |
| 01.04.2024 | | மீ.கீ.கொ.வ | | 20800 | | | | | |

(4 புள்ளி)

| வினா இல 05 | i | ii | | | | iii | | | Iv | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அ | ஆ | இ | ஈ | அ | ஆ | இ | | 12 |
| | 02 | 1/2 | 1/2 | 1/2 | 1/2 | 01 | 01 | 02 | 04 | 12 |

6\. (i) வணிகமொன்றின் வங்கிக் கணக்கு மற்றும் வங்கிக் கூற்று ஆகியவற்றின் இறுதி மீதிகள் வித்தியாசமாகக் காணப்படுவதற்கான இரண்டு காரணங்கள் பின்வருவன ஆகும்.

(1) வழங்கப்பட்ட போதும் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலை

(2) வைப்புச் செய்தபோதும் வசூலிக்கப்படாத காசோலைகள்

மேலே தரப்பட்ட ஒவ்வொரு காரணமும் வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதியை அதிகரிக்குமா அல்லது குறைக்குமா என்பதைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் உற்பத்திப்பொருட்கள் ஒவ்வொன்றினதும் கிரய வகைக்குப் பொருத்தமான உதாரணம் தருக.

| இல | உற்பத்திப்பொருள் | கிரயவகை | உதாரணம் |
|---|---|---|---|
| 1 | பாண் | நேர் மூலப்பொருள் கிரயம் | ........................ |
| 2 | பாடசாலை சீருடை | நேர் கூலிக் கிரயம் | ........................ |

(02 புள்ளிகள்)

(iii) நிர்மலா என்பவரின் கால்மிதி (floor mat) தைக்கும் வணிகத்தின் 2024 ஏப்ரல் மாதத்திற்கான தகவல்கள் வருமாறு.

| | ரூ. |
|---|---|
| வெட்டித் தைக்கும் துணிகள் கொள்வனவு | 60 000 |
| தையல் இயந்திரம் கொள்வனவு கடனுக்கு (இது வருடாந்தம் 10% பெறுமானத்தேய்வடையும்) | 120 000 |
| நூல், ஊசி மற்றும் ஏனைய மூலப்பொருட்கள் கொள்வனவு | 2 000 |
| கால்மிதி தைப்பவருக்கு செலுத்திய கூலி | 40 000 |
| தைக்கும் இடத்தை சுத்தம் செய்பவருக்கு செலுத்திய கூலி | 10 000 |
| ஏப்ரல் மாதத்துக்கான மின்சாரப் பட்டியல் செலுத்தியது | 5 000 |
| வணிகத்துக்கான மாதாந்த வாடகை | 8 000 |

- ஒரு கால்மிதிக்கான உற்பத்திக் கிரயம் ரூ. 126 ஆகும்.

வேண்டப்படுவது:

(அ) 2024 ஏப்ரல் மாதத்துக்கான உற்பத்திக் கிரயக் கூற்று

(ஆ) 2024 ஏப்ரல் மாதத்தில் உற்பத்தி செய்த கால்மிதிகளின் எண்ணிக்கை (04 புள்ளிகள்)

(iv) 31.03.2024 இல் இருந்தவாறு வணிகம் ஒன்றின் பயிலுனர் எழுதுவினைஞரால் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கு இணக்கக்கூற்று வருமாறு:

வங்கிக் கணக்கு இணக்கக்கூற்று

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| 31.03.2024 இல் இருந்தவாறு வங்கிக் கணக்கு மீதி | | 33 000 |
| கூட்டு : கடன்பட்டோர் நேரடி வைப்புகள் | 13 000 | |
| வைப்புச் செய்தபோதும் வசூலிக்கப்படாத காசோலைகள் | 24 000 | 37 000 |
| | | 70 000 |
| கழி : வங்கிக்கடன் தவணைக்கட்டணம் | 5 000 | |
| காசோலைப் புத்தகக் கட்டணங்கள் | 1 000 | |
| வழங்கப்பட்ட போதும் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 15 000 | (21 000) |
| வங்கிக்கூற்று மீதி | | 49 000 |

வேண்டப்படுவது:

(அ) 31.03.2024 இல் இருந்தவாறு செம்மையாக்கிய வங்கிக் கணக்கு மீதி

(ஆ) 31.03.2024 இல் இருந்தவாறு சரியான வங்கிக் கணக்கு இணக்கக் கூற்று

(04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

6\. ( i ) (1) குறைக்கும்

(2) அதிகரிக்கும் ( 1 X 2 = 2 புள்ளி )

(ii)

| இல | உதாரணம் |
|---|---|
| 1 | மாவு |
| 2 | ஆடை தைப்பதற்கான கூலி |

( 1 X 2 = 2 புள்ளி )

(iii) (அ)

நிர்மலா வணிகத்தின் 2024 ஏப்பிரல் மாதத்திற்கான

உற்பத்திக் கிரயக் கூற்று

| | | |
|---|---|---|
| **மூலக்கிரயம்.** | ரூபா | ரூபா |
| வெட்டுத்துண்டுத் துணிகள் கொள்வனவு | 60000 (½) | |
| கால்மிதி தைப்பவருக்கு செலுத்திய கூலி | 40000 (½) | 100000 |
| **உற்பத்தி மேந்தலைக் கிரயம்** | | |
| நூல் ஊசி மற்றும் ஏனைய மூலப்பொருட்கள் கொள்வனவு | * 2000 | |
| சுத்தம் செய்பவருக்கு செலுத்திய கூலி | *10000 | |
| மின்சாரம் | * 5000 | |
| வாடகை | * 8000 | |
| தையல் இயந்திரத் தேய்வு | 1000 (½) | |
| | | 26000 |
| மொத்த உற்பத்திக் கிரயம் (½) | | 126000 (½) |

(ஏதாவது 3 * க்கு ½ புள்ளி)

( 3 புள்ளிகள் )

(ஆ) 2024 ஏப்ரல் மாதத்தில் உற்பத்தி செய்த கால்மிதிகளின் எண்ணிக்கை

1000 அலகு

(1 புள்ளி)

அல்லது

(½) $\frac{126000}{126}$

(iv) (அ)

செம்மையாக்கிய வங்கிக் கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | தொகை ரூபா | திகதி | விபரம் | பே.ப | தொகை ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| 31.03.2024 | மீ.கீ.கொ.வ | | 33000 (½) | | வ.க.தவணைக் கட்டணம் | | 5000 (½) |
| | நேரடி வைப்பு | | 13000 (½) | | காசோலை புத்தகக்கட்டணம் | | 1000 (½) |
| | | | | 31.03.2024 | மீ.கீ.கொ.செ | | 40000 |
| | | | 46000 | | | | 46000 |
| 01.04.2024 | | | 40000 | | | | |

(2 புள்ளி )

(ஆ) 31.03.2024 இல் இருந்தவாறு சரியான வங்கிக் கணக்கு இணக்கக் கூற்று

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| திருத்திய வங்கிக் கணக்கு மீதி 31.03.2024 இல் | | (½) 40000 |
| (+) சமர்ப்பிக்கப்படாத காசோலை | 15000 | 15000 (½) |
| | | 55000 |
| (-) வசூலிக்கப்படாத காசோலை | 24000 | (24000) (½) |
| 31.03.2024 இல் வங்கிக் கூற்றின்படி மீதி | | **31000** (½) |

( 2 புள்ளிகள் )

| வினா இல. | i | | ii | | iii | | iv | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 1 | 2 | அ | ஆ | அ | ஆ | 12 |
| 06 | 01 | 01 | 01 | 01 | 03 | 01 | 02 | 02 | 12 |

7. (i) இலாப நோக்கற்ற நிறுவனமொன்றின் பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கின் செலவுப் பக்கத்தில் பதியப்படுவதும் வருமானச் செலவு கணக்கில் உள்ளடக்கப்படாததுமான உருப்படிகள் இரண்டு எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) தீவக இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 31.12.2023 இல் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்குப் புத்தகங்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட சில தகவல்கள் வருமாறு.

| வருடத்தின் போது பெற்றவை | வருடத்தின் போது செலுத்தியவை |
|---|---|
| அங்கத்துவக் கட்டணங்கள் ரூ. 30 000 | பார்வையாளர் அரங்கு பராமரிப்பு ரூ. 12 000 |
| நன்கொடைகள் ரூ. 10 000 | மின்கட்டணங்கள் ரூ. 8 000 |

மேலதிக தகவல்கள் :

- 31.12.2023 இல் இருந்தவாறு பெறவேண்டிய அங்கத்துவ கட்டணங்கள் ரூ. 2 000
- 31.12.2023 இல் இருந்தவாறு செலுத்த வேண்டிய மின்கட்டணங்கள் ரூ. 6 000

வேண்டப்படுவது:

31.12.2023 இல் முடிவடைந்த வருடத்துக்காக தீவக இளைஞர் விளையாட்டுக் கழகத்தினால் தயாரிக்கப்படும் வருமானச் செலவு கணக்கில் உள்ளடக்கப்பட வேண்டிய நான்கு உருப்படிகளை தொகைகளுடன் எழுதுக. (02 புள்ளிகள்)

(iii) 31.12.2023 இல் இருந்தவாறு தமிந்த சில்லறை வணிகத்தின் பரீட்சை மீதி வருமாறு.

| | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| கொள்வனவுகள் | 380 000 | |
| விற்பனைகள் | | 550 000 |
| 01.01.2023 இல் இருந்தவாறு சரக்கிருப்பு | 80 000 | |
| உள்வந்த வண்டிக் கூலி | 10 000 | |
| கடன்பட்டோர் | 190 000 | |
| கடன்கொடுத்தோர் | | 244 000 |
| வங்கிக் கடன் 10% | | 100 000 |
| வங்கிக் கடன் வட்டி செலுத்தியது | 6 000 | |
| விநியோக வாகனங்கள் (கிரயத்தில்) | 400 000 | |
| 01.01.2023 இல் இருந்தவாறு விநியோக வாகனங்களின் பெறுமானத்தேய்வு ஏற்பாடு | | 40 000 |
| தளபாடங்களும் உபகரணங்களும் (கிரயத்தில்) | 120 000 | |
| மின் கட்டணங்கள் | 60 000 | |
| விளம்பரப்படுத்தற் செலவுகள் | 44 000 | |
| காசு மீதி | 44 000 | |
| மூலதனம் | | 400 000 |
| | 1 334 000 | 1 334 000 |

மேலதிக தகவல்கள் :

- 31.12.2023 இல் இருந்தவாறு சரக்கிருப்புகள் ரூ. 88 000
- வருடாந்தம் விநியோக வாகனங்கள் 5% இனாலும் தளபாடங்களும் உபகரணங்களும் 10% இனாலும் நேர் கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.

வேண்டப்படுவது:

(அ) 31.12.2023 இல் முடிவடைந்த வருடத்துக்கான தமிந்த வணிகத்தின் இலாப நட்டக் கூற்று (04 புள்ளிகள்)

(ஆ) 31.12.2023 இல் இருந்தவாறான தமிந்த வணிகத்தின் நிதி நிலைமைக் கூற்று (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

***

7. (i)

- நடைமுறை அல்லாத சொத்துக்கள் கொள்வனவு ,
- கடன்கொடுத்தோருக்கு கொடுத்த காசு ,
- வங்கிக் கடன் வட்டி அல்லாது வங்கிக் கடன் செலுத்துதல்.
- நிலையான வைப்பில் முதலீடு செய்தல்.
- ஊழியர்களுக்கு கடன் கொடுத்தல்

( 1 X 2 = 2 புள்ளி )

(ii)

- அங்கத்துவக் கட்டணம் 32000 ரூபா
- நன்கொடைகள் 10000 ரூபா
- மின்கட்டணம் 14000 ரூபா
- பார்வையாளர் அரங்கு பராமரிப்பு 12000 ரூபா

( ½ X 4 = 2 புள்ளி )

iii. (அ)

**அல்லது**

துமிந்த வணிகத்தின்
31.12.2023 இல் முடிவடைந்த ஆண்டுக்கான
இலாப நட்டக் கூற்று ½

| | ரூபா | ரூபா | ரூபா |
|---|---|---|---|
| விற்பனை | | | 550000 |
| **கழி: விற்பனைக் கிரயம்** | | | |
| 01.01.2023 இல் சரக்கிருப்பு | | 80000 | |
| கொள்வனவு | 380000 | | |
| உள்வந்த வண்டிக்கூலி | 10000 | 390000 | |
| விற்கத் தயாராக இருந்த சரக்கின் பெறுமதி | | 470000 | |
| கழி: 31.12.2023 இல் சரக்கிருப்பு | | (88000) ½ | |
| **விற்பனைக்கிரயம்** | | 382000 | (382000) ½ |
| **மொத்த இலாபம்** | | | 168000 ½ |
| **<u>கழி: செலவுகள்</u>** | | | |
| **<u>விநியோக செலவுகள்</u>** | | | |
| விநியோக வாகன தேய்வு | 20000 ½ | | |
| விளம்பரச் செலவுகள் | 44000 | | |
| | | 64000 | |
| **<u>நிர்வாகச் செலவுகள்</u>** | | | |
| தளபாட உபகரண தேய்வு | 12000 ½ | | |
| மின்கட்டணம் | 60000 | | |
| | | 72000 | |
| **<u>நிதிச் செலவுகள்</u>** | | | |
| வங்கிக்கடன் வட்டி | 10000 ½ | 10000 | |
| **தேறிய இலாபம் மூலதனக் கணக்கிற்கு மாற்றியது.** | | | ( 146000 ) |
| | | | **22000** ½ |

**( 4 புள்ளிகள் )**

Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers!

(ஆ) தமிந்த வணிகத்தின்
31.12.2023 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று ½

| | கிரயம் | தி.பெ.தே | தேறிய பெறுமதி |
|---|---|---|---|
| **நடைமுறை அல்லாத சொத்து** | | | |
| விநியோக வாகனங்கள் | 400000 | 60000 ½ | 340000 |
| தளபாடங்களும் உபகரணங்களும் | 120000 | 12000 ½ | 108000 |
| | 520000 | 72000 | 448000 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| சரக்கிருப்பு 31.12.2023 | | 88000 ½ | |
| கடன்பட்டோர் | | 190000 | |
| காசு மீதி | | 44000 | 322000 |
| மொத்த சொத்துக்கள் | | | 770000 |
| **உரிமையாண்மை** | | | |
| மூலதனம் 01.01.2024 | ½ | 400000 | |
| கூட்டு : தேறிய இலாபம் | | 22000 | 422000 |
| **நடைமுறையல்லாப் பொறுப்பு** | | | |
| 10% வங்கிக் கடன் | | | 100000 ½ |
| **நடைமுறைப் பொறுப்பு** | | | |
| கடன்கொடுத்தோர் | | 244000 | |
| செலுத்த வேண்டிய வங்கிக் கடன் வட்டி | | 4000 ½ | 248000 |
| **மொத்த உரிமையாண்மையும் பொறுப்பும்.** | | | 770000 |

( 4 புள்ளிகள் )

| வினா இல | (i) | (ii) | (iii) | | |
|---|---|---|---|---|---|
| 7 | | | அ | ஆ | 12 |
| | 02 | 02 | 04 | 04 | 12 |

(28) WWW.PastPapers.WiKi (28)
Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers!

PARCEL NO

LOL.lk
BookStore

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින් නිවසටම ගෙන්වා ගන්න






කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර | A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් | School Book ගුරු අතපොත්

PADANAMA PUBLICATION | pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | T | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර, කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා

## සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න